22.04.2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 20/2019**

அ.சா.2

பெயர். திரு.நபீபாஷா

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் குறித்து எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என தெரிவித்தார்.

**1,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஜாகீர் உசேன் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். இறந்துபோன ஜாபர் பல்வேறு விசயங்களில் தலையீட்டு பஞ்சாயத்து செய்வார் என்றால் சரியல்ல. அவர் எங்களது குடும்ப பிரச்சனை என்று யாராவது முறையீடு செய்தால் அப்போது பஞ்சாயத்து செய்வார். மற்றவர்களின் பிரச்சனையில் ஜாபர் பஞ்சாயத்து செய்வது பற்றி எனக்கு தெரியாது. சொந்தத்தில் எதாவது செய்தால் மட்டும் எனக்கு தெரியும். சொந்தத்தில் அவர் பஞ்சாயத்து செய்தது குறித்து எனக்கு குறிப்பிட்டு எந்தெந்த சமயங்களில் செய்தார் என்று தெரியாது. நான் 2018ல் வைத்திருந்த போனை தான் தற்போதும் பயன்படுத்துகிறேனா என்றால் இல்லை. அது தண்ணீரில் விழுந்து ரிப்பேர் ஆகிவிட்டது. ஆனால் நான் 2018ல் பயன்படுத்திய அதே கைபேசி எண்ணை தான் தற்போதும் பயன்படுத்தி வருகிறேன். 2018ல் சம்பவம் நடந்த பிறகு என்னையும், காவல் துறையினர் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான். 2018ல் என்னை விசாரித்த போது காவல் துறையினர் எனது கைபேசியை கைப்பற்றவில்லை. ஆனால் அதன் எண்ணை மட்டும் வாங்கிகொண்டார்கள். ஜாபர் வழக்கமாக கொல்லைக்கு எப்போது வருவார், எப்போது போவார் என்று எனக்கு தெரியும் என்றால் நேரம் உறுதியாக என்னால் சொல்ல

முடியாது. போலீசார் விசாரிக்கும் போது நான் மதியம் சுமார் 12 .30 மணியளவில் பஞ்சாயத்து பேசி சமாதானம் செய்து அனுப்பியுள்ளார் என்று சொன்னேன் என்றால் ஆமாம். நான் நீதிமன்றத்தில் என்னை விசாரிக்கும் போது நான் பஞ்சாயத்தில் இருந்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் ஜாகீா உசேனுக்கு, அப்துல் மஜீத் நிலத்தை விற்பதற்கு முன்பு ஷாப்ஜி ஜபார் மகன் ஜாப்ஜான் என்பவருக்கு உடன்படிக்கை போட்டு பேசி முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது குறித்து எனக்கு தெரியாது. ஜபாருக்கு அவரது அண்ணன் ஷம்சுதினுக்கு நிலம் சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது என்றால் தகராறை நான் பார்த்ததில்லை. தகராறு எதுவும் இல்லை. நன்றாக பேசிக்கொண்டு தான் இருந்தார்கள். கடந்த 27.06.2018ந் தேதி 11 மணியளவில் அவரது நிலத்திலுள்ள வீட்டிற்கு சென்றோம் என்றும் அங்கு ஜாகீா மற்றும் மஜீத் அவா்களுக்கு சொந்தத்தில் முறையீட்டோம் அவா் பஞ்சாயத்து செய்தார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரியாணி வாங்கிய இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 2 1/ 2 கி.மீ தூரம் இருக்கும். 27.06.2018க்கு முன்பு ரொகாயாபீ எனக்கு போன் செய்து அப்துல் ஜபாரை பற்றி கேட்டுள்ளார்களா என்றால் எப்போதாவது கேட்பார். நான் காவல் துறை விசாரணையில் அப்துல் ஜபார் என்னிடம் நீ வீ,ட்டிற்கு போ, நான் பிரியாணி சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் நேரம் கழித்து போகிறேன் என்று சொன்னதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் குன்னத்தூரில் கலில் என்பவரின் கடையில் பிரியாணி வாங்கினேன்.இந்த விவரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன். காலையில் நான் அவரை பார்க்கும்போது என்ன உடை அணிந்திருந்தார் என்றால் பேன்ட் அணிந்திருந்தார். கருப்பு கலா் பேன்ட் அணிந்திருந்தார். ரொகாயாபீ என்னிடம் அவா் போன் எடுக்க மாட்டேன் என்று சொன்ன பிறகு நான் ஜபாருக்கு 2.1/2 மணிக்கு பிறகு போன் செய்தேனா என்றால் போன் செய்யவில்லை. நேரில் சென்று பார்த்தேன். மதியம் 2. 1/2 மணிக்கு அவருக்கு நான் போன் செய்யவில்லை. அதன் பிறகு 6.1/4 மணிக்கு ரொகாயாபீ எனக்கு போன் செய்த போதும் நான் அவருக்கு போன் செய்யவில்லை. நேரில் தான் சென்று பார்த்தேன். அப்துல் ஜபாரின் வீடு வழக்கமாக உள்புறம் பூட்டபட்டிருக்குமா அல்லது திறந்திருக்குமா என்றால் சிலநேரம் பூட்டபட்டிருக்கும். சிலநேரம் திறந்திருக்கும். நான் தான் கதவை திறந்து முதலில் உள்ளே சென்று பார்த்தேனா என்றால் நான் திறக்கவில்லை. கதவு திறந்தநிலையில் தான் இருந்தது. இரண்டு கதவும் நன்றாக

திறந்தநிலையில் இருந்ததா என்றால் ஒரு கதவு மட்டும் தான் திறந்தநிலையில் இருந்தது. நான் உள்ளே சென்று அவரை தூக்கி பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் அவர் வெட்டு காயத்துடன் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் அவரை பார்த்து பதறி போய் தொடவில்லை. நிலம் விற்றதில் என்ன தகராறு என்றால் தகராறு எதுவும் இல்லை. தகராறு இல்லாமல் தான் நிலம் கொடுத்தார்கள். நான் பிரேதத்தை பார்த்தவுடன் காவல் துறையினருக்கு தகவல் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. ஜம்சுதின் தான் சொன்னார். நான் காவல் துறை விசாரணையில் பஞ்சாயத்து பேசி முடிந்த உடன் அவர் வீட்டிற்கு சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பிரேத விசாரணையில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன். நான் உள்ளே சென்று பார்த்தபோது அங்கு பிரியாணி பொட்டலம் கட்டிலில் மாட்டப்பட்டிருந்தது. நான் எல்லா இடத்தையும் சுற்றி பார்த்ததன் அடிப்படையில் தான் சொல்கிறேன் என்றால் நான் சுற்றி பார்க்கவில்லை. எனக்கு உண்மையான குற்றவாளிகள் யார் என்று தெரியும் என்றும், நான் உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றும் நோக்கத்துடனோ அல்லது ஜம்சுதினை காப்பாற்றும் நோக்கத்துடனோ உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோகன் என்பவர் அந்த ஊர் தேர்தலில் ஜம்சுதினை எதிர்த்து போட்டியிட்டார் என்றும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. ஜம்சுதின் தேர்தலில் நின்ற விவரம் எனக்கு தெரியும். நானும் அதே ஊரைச் சேர்ந்தவர் என்றால் ஆமாம். அதை எதிர்த்து சில பேர் போட்டியிட்டார்கள். அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். ஜம்சுதினை எதிர்த்து மோகன் என்பவர் தேர்தலில் போட்டியிட்டார் என்றும், அவர் நின்றால் ஜம்சுதின் தோற்றுவிடுவோம் என்று பயந்து அவரை தேர்தலிலிருந்து வாபஸ் வாங்க அழுத்தம் கொடுக்கப்பட்டது என்றும் ஆனால் மோகன் தேர்தலில் போட்டியிட்டார் என்றும் அந்த முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு ஜம்சுதினால் மோகன் மீது போடப்பட்டது என்றால் சரியல்ல. இறந்துபோன ஜபார் பல பஞ்சாயத்துக்களில் ஈடுபட்டுள்ளார் என்றும் அதே போல் பெண்கள் விசயத்தில் அவருக்கு தொடர்புகள் உள்ளது என்றும் இது குறித்த விசயங்கள் எனக்கு தெரியும் என்றும், என் சொந்த லாபத்திற்காக அந்த விவரங்களை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**